**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

C 8030865

1. District மாவட்டம் : Chennai PS: காவல்நிலையம் Chennai city -III Year: ஆண்டு 2018 FIR No. முதஅ. எண் 1/AC/2018/CC-III Date: நாள் 05.01.2018

2. (i) Act சட்டம்: Cr.pc Sections பிரிவுகள்: 102 Crpc
(ii) Act சட்டம்: pc Act 1988 Sections பிரிவுகள்: 13(2), r/w 13(1)(d) PC Act 1988
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 04.01.2018 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.45 Time to : நேரம் வரை 23.45 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.01.2018 Time நேரம் : 18.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.01.2018 Time நேரம் 19.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Approximately 23kms. North East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Regional Transport office (north east) no. 147, Ground floor, Balakrishna Street, T.H. Road, Tondiarpet, Chennai-81.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. D. RAMAN (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District Deputy Inspection cell Officer, Chennai (g) Address : முகவரி O/o The District Inspection cell, Chennai Collectorate, Chennai-1

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. K.M. prabhakaran, RTO, Regional Transport office North East, Tondiarpet, Chennai-81
2. Tr. J. Senthilkumar, motor vehicle Inspector, Grade-I, Regional Transport office, Tondiarpet, Chennai-81. 3. Tr. R. Saravanan, MVI Grade-II, Regional Transport office, Tondiarpet, Chennai-81

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
[illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. Visvakhumar பதவி Inspector of Police நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5.1.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு தாளில் பெறப்பட்டது

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05.01.18

Name: பெயர் M. VISVAKHUMAR
Rank: நிலை Inspector of police, CC-III, V&AC, ch.3 No. எண் ..........

Chennai V&AC, Chennai City-III Cr.No.1/AC/2018/CC-III FIR Continuation (Column -12):-

பணிந்தனுப்பப்படுகிறது:-

இன்று 05.01.2018-ந்தேதி மாலை 18.30 மணிக்கு சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3ன் காவல் ஆய்வாளராகிய நான் அலுவலக பணியிலிருந்தபோது சென்னை நகரப்பிரிவு-3ன் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சென்னை-01, மாவட்ட ஆய்வுக்குழும அலுவலகம், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலரிடமிருந்து 18.00 மணிக்கு தபாலில் பெற்ற எழுத்து மூலமான புகார், இரு துறை கூட்டு திடீர் தணிக்கை செயல்முறை நடவடிக்கை, அதில் கைப்பற்றிய பணம் ரூ.1,34,040/- மற்றும் அதனுடன் இணைந்த ஆவண நகல்கள் மற்றும் ரசீதுகள் ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்ய உத்தரவளித்ததின்பேரில் இன்று 05.01.2018-ந்தேதி மாலை 19.00 மணிக்கு நான் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3ன் கு.எண்.1/AC/2018/CC-III u/s 102 CrPC, r/w 13(2) r/w 13 (1) (d) of Prevention of Corruption Act 1988-ன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் வழக்கு பதிவு செய்த புகார் மற்றும் இரு துறை கூட்டு திடீர் தணிக்கை செயல்முறை நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு:- அனுப்புனர், திரு.D.இராமன், வட்டாட்சியர், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழும அலுவலகம், சென்னை-01. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, ஆலந்தூர், சென்னை-16. ந.க.எண்.அ1/04/2018, நாள் 05.01.2018, அய்யா, பொருள் : கூட்டுத் தணிக்கை - இரு துறை கூட்டு திடீர் தணிக்கை. வட்டார போக்குவரத்து (வட கிழக்கு), T.H.Road, பாலகிருஷ்ணன் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-81ல் 04.01.2018 அன்று கூட்டுத் தணிக்கை செய்யப்பட்டது - நடவடிக்கை எடுக்க அனுப்புதல் - தொடர்பாக. பார்வை : சம்மந்தப்பட்ட ஆவணங்கள். சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் அவர்களின் அறிவுரையின்படி 04.01.2018 மாலை 17.45 மணிமுதல் 23.45 மணிவரை, சென்னை-600 081, தண்டையார்பேட்டை, T.H.Road, பாலகிருஷ்ணன் தெரு, எண். 147, தரைத்தளத்தில் இயங்கும் வட்டார போக்குவரத்து வட கிழக்கு சென்னை அலுவலத்தில் இருதுறை கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,34,040/- மற்றும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகளின் நகல்கள் ஆகியவற்றை மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, இன்று 05.01.2018-ந்தேதி காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை குறிப்பு தகுந்த நடவடிக்கைக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய (ஒம்/-xxx D.இராமன்) 05/01/18, துணை ஆய்வுக்

குழும அலுவலா், சென்னை-1. இணைப்பு : சென்னை ஆய்வுக் குழுமம் மற்றும் சென்னை நகர ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-III காவல் துணை கண்காணிப்பாளா் தலைமையில், சென்னை-600 081, தண்டையாா்பேட்டை, T.H.Road, பாலகிருஷ்ணன் தெரு, எண். 147, தரைத்தளத்தில் இயங்கும் வட்டார போக்குவரத்து வட கிழக்கு சென்னை அலுவலத்தில் இன்று 04.01.2018 மாலை 17.45 மணி முதல் 23.45 மணிவரை மேற்கொள்ளப்பட்ட திடீா் கூட்டு ஆய்வின் நடவடிக்கைகள். 05.01.18. 18.00 hrs; Received the complaint, along with the cash Rs.1,34,040/-, copy of documents with proceedings, Ins., Tr.M.Visvakhumar is endorsed to register a case and investigate.sd/-xxx 05/01/2018, DSP, CC-III, V&AC, Chennai-16. Sir, received a complaint, proceedings, cash Rs.1,34,040/-, receipts and copy of documents on 05.01.18 at 18.30 hrs. sd/-xxx M.Visvakhumar, Inspector of Police, CC-III, V&AC, Chennai-16. Sir, Registered a case in Chennai V&AC, Chennai City-III Cr.No.1/AC/2018/CC-III u/s 102 CrPC, 13(2) r/w 13(1) (d) of Prevention of Corruption Act, 1988 on 05.01.18 at 19.00 hrs. sd/-xxx M.Visvakhumar, Inspector of Police, CC-III, V&AC, Chennai-16.

சென்னை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலா் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு- III, காவல் துணை கண்காணிப்பாளா் தலைமையில், சென்னை-81, தண்டையாா்பேட்டை, T.H.Road, பாலகிருஷ்ணன் தெரு, எண். 147, தரைத்தளத்தில் இயங்கும் வட்டார போக்குவரத்து வட கிழக்கு, சென்னை அலுவலத்தில் இன்று 04.01.2018 மாலை 17.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட திடீா் கூட்டு ஆய்வின் நடவடிக்கைகள். அலுவலகத் தொலைபேசி எண் 25911133, துறைத் தலைமை அலுவலகம். முதன்மை செயலா் / போக்குவரத்து ஆணையா், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5. திடீா் கூட்டு ஆய்வில் ஈடுபட்ட அலுவலா்கள் விவரம் பின்வருமாறு, 1) திரு D.இராமன், வட்டாட்சியா், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலா், மாவட்ட ஆய்வுக்குழும அலுவலகம், சென்னை - 600 001, 2) திரு.எஸ்.ஜான் கிளமென்ட், காவல் துணை கண்காணிப்பாளா், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, ஆலந்தூா், சென்னை-16, 3) திரு.மா.விஸ்வக்குமாா், காவல் ஆய்வாளா், ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூா், சென்னை-16, 4) திரு ஆா்.மூா்த்தி, தலைமைக்காவலா் 23186, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூா், சென்னை-16, 5) திரு.தா.அந்தோணி தங்கராஜ், தலைமைக் காவலா் 23136, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூா், சென்னை-16, 6) திரு எஸ்.வி.ராமானுஜம், தலைமை காவலா் 17950, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூா், சென்னை-16 மற்றும் 7) திருமதி. கோமதி, பெண் மு.நி.கா.36684, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை சிறப்பு புலனாய்வு பிரிவு-3, ஆலந்தூா், சென்னை-16. இன்று (04.01.2018) மாலை 17.45 மணியளவில்

சென்னை மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு D. இராமன், வட்டாட்சியர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகர பிரிவு -3, காவல் துணை கண்காணிப்பாளர், திரு எஸ்.ஜான் கிளமென்ட் ஆகிய இரு துறை குழுவினர் இணைந்து சென்னை - 600 081, T.H.Road, தண்டையார்பேட்டை, பாலகிருஷ்ணா தெரு, கதவு எண் 147 தரைத்தளத்தில் இயங்கும் வட்டார போக்குவரத்து வட கிழக்கு, சென்னை அலுவலத்தில் கூட்டுத் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வட்டார போக்குவரத்து வட கிழக்கு, சென்னை அலுவலகத்தின் உள்ளே வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கே.எம்.பிரபாகரன் இருந்தார். அறைக்கு வெளியில் அவருடைய நேர்முக உதவியாளர் திருமதி எஸ்.அமுதா இருந்தார்கள். வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கே.எம்.பிரபாகரன் அவர்களிடம் ரூ.950/- பணம் இருந்தது. அப்பணம் குறித்து அவர் தகுந்த விளக்கம் அளித்ததால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அந்த் அறையிலிருந்து பணமோ பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதற்கு அடுத்திருந்த எல்காட் அறையில் தினகூலிபணியாளர்கள் 1) திரு. புருஷோத்தமன் மற்றும் 2) திரு.ஸ்ரீதர் ஆகியோர் இருந்தனர். அவர்களில் திரு புருஷோத்தமனிடம் ரூ.250/-ம் திரு.ஸ்ரீதரிடம் ரூ.1,400/- பணம் இருந்தது. அப்பணம் குறித்து அவர்கள் தகுந்த விளக்கமளித்ததால் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், எல்காட் அறையின் தரையில் ரூபாய் நோட்டுக்கள் கேட்பாரற்று சிதறிக் கிடந்தன. அவைகளை சேகரித்து எண்ணிப்பார்க்க ரூ.15,490/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 500 x 21 | Rs.10,500 |
| 100 x 38 | Rs.3,800 |
| 50 x 12 | Rs.600 |
| 20 x 17 | Rs.340 |
| 10 x 25 | Rs.250 |
| Total | Rs.15,490 |

மேற்கண்ட Rs.15,490/- பணத்தை யாரும் உரிமை கோராததால் உரிய மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதை அடுத்திருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.ஜே.செந்தில்குமார் மற்றும் திரு. ஆர்.சரவணன் இருந்தனர். அந்த அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, திரு.ஜே.செந்தில்குமார் அவர்கள் ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து வகுப்பு எடுத்து கொண்டிருந்தார். மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.ஜே.செந்தில்குமாரிடம் ரூ.520/- மற்றும் திரு. ஆர்.சரவணனிடம் ரூ 220/- பணம் இருந்தது. அப்பணம் குறித்து அவர்கள் தகுந்த விளக்கம்

அளித்ததால் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அந்த வகுப்பில் கலந்து கொண்ட ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள் மற்றும் அவர்கள் கையிருப்பிலிருந்த பணம் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | ஓட்டுநர் பயிற்சி பள்ளி விவரம் | கையிருப்பி லிருந்த பணம் | பணத்தாள்கள் விவரம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.நேசமணி, எண் 666சி, டி.எச்.ரோடு, திருவொற்றியூர், சென்னை-19 | நேசமணி டிரைவிங் ஸ்கூல் | ரூ.22,900.00 | 2000 x 2 = 4,000<br>500 x 32 = 16,000<br>200 x 6 = 1,200<br>100 x 17 = 1,700 |
| 2. | திரு.ஆர்.கே.சீனிவாசன், எண்.3, ஜி-1, அன்ஸா அபிபா கிளாஸ் பேஃக்டரி சாலை, திருவொற்றியூர், சென்னை-19. | மெர்க்குரி டிரைவிங் ஸ்கூல் | ரூ.8,400.00 | 2000 x 1 = 2,000<br>500 x 11 = 5,500<br>100 x 9 = 900 |
| 3. | திரு.சதீஷ்குமார், எண்.31, சுந்தரம்பிள்ளை நகர், 3வது மெயின் தெரு, பவர்உறவுஸ், எஸ்.ஆர்.பெட்ரோல் பங்க் அருகில், சென்னை-81 | ஸ்ரீவிநாயகா டிரைவிங் ஸ்கூல் | ரூ.5,500.00 | 2000 x 2 = 4,000<br>500 x 3 = 1,500 |
| 4. | திரு.எஸ்.டில்லிபாபு, .எண்.667, டி.எச்.ரோடு,தண்டையார்பேட்டை, சென்னை-81. | ஸ்ரீஅண்ணாமலையார் டிரைவிங் ஸ்கூல் | ரூ.1,500.00 | 500 x 2 = 1,000<br>100 x 5 = 500 |
| 5. | திரு.ஜி.சத்தியமூர்த்தி, எண்.118,டி.எச்.ரோடு, திருவொற்றியூர், சென்னை-19. | மகேஸ்வரி டிரைவிங் ஸ்கூல் | ரூ.2,800.00 | 500 x 2 = 1,000<br>200 x 6 = 1,200<br>100 x 6 = 600 |
| 6. | திரு.சதீஷ்ராஜன், எண்.106, ராஜாஜி நகர், முதல் தெரு, திருவொற்றியூர், சென்னை-19. | ராஜா டிரைவிங் ஸ்கூல் | ரூ.2,000.00 | 500 x 4 = 2,000 |
| 7. | திருமதி தனலட்சுமி, எண்.3, நமச்சிவாய தெரு, எம்.சி.ரோடு, பூர்விகா அருகில், சென்னை-21. | தனலட்சுமி டிரைவிங் ஸ்கூல் | ரூ.16,700.00 | 2000 x 2 = 4,000<br>500 x 23 = 11,500<br>100 x 12 = 1,200 |

மேற்கண்ட நபர்களிடம் அவர்கள் கையிருப்பில் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்டபோது வரிசை எண்.1 முதல் 6 வரை உள்ளவர்கள் தகுந்த விளக்கம் அளிக்க இயலவில்லை. வரிசை எண் 7ல் கண்ட திருமதி தனலட்சுமி ரூ.6,000/-த்திற்கு வங்கியிலிருந்து எடுத்ததற்கான ஆதாரத்தை சமர்ப்பித்ததால் ரூ.6000/-ம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மீதிப் பணம்

ரூ.10,700/- க்கு அவரால் தகுந்த விளக்கம் அளிக்க இயலவில்லை. எனவே மேற்கண்ட 7 நபர்களிடமிருந்து பணம் மொத்தம் ரூ.53,800/-ஐ உரிய நடவடிக்கை மேற்கொள்ள கைப்பற்றப்பட்டது. அதற்கடுத்திருந்த அலுவலக பிரிவுகள் அ, இ, உ இயங்கி வந்த அறையில் இருந்த அலுவலர்கள் பெயர் விலாசம் மற்றும் அவர்கள் கையிருப்பிலிருந்த பண விவரம் பின்வருமாறு:-

| வ. எண். | பெயர் மற்றும் வகிக்கும் பதவி | கையிருப்பிலிருந்த பணம் | பணத்தாள்கள் விவரம் |
|---|---|---|---|
| 1. | திரு.என்.சுமேஷ், அ பிரிவு கண்காணிப்பாளர் | ரூ. 1,500.00 | பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. |
| 2. | திரு.ஆர்.சுமன், அ1 பிரிவு உதவியாளர் | ரூ.4,200.00 | |
| 3. | திருமதி லாவண்யா, அ3 பிரிவு இளநிலை உதவியாளர் | ரூ.3000.00 | |
| 4. | திரு.டி.ராஜன், உ பிரிவு கண்காணிப்பாளர் | ரூ.2,600.00 | |
| 5. | திருமதி.டி.பூங்கோதை, உ பிரிவு இளநிலை உதவியாளர் | ரூ.410.00 | |
| 6. | திரு.கே.இளங்கோ, அ2 பிரிவு உதவியாளர் | ரூ.810.00 | |
| 7. | திரு ரமேஷ்பாபு பதிவுறு எழுத்தர் | ரூ.350.00 | |

மேற்கண்ட வரிசை எண் 1 முதல் 7 வரை உள்ள அலுவலர்களிடம் அவர்கள் கையிருப்பில் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்டபோது அவர்கள் தகுந்த விளக்கம் அளித்ததால் அவர்களிடமே மீண்டும் அவர்களுடைய பணம் திரும்பவும் ஒப்படைக்கப்பட்டது. அதைத் தவிர திரு.ஜி.வடிவேல், கணக்காளர், திருமதி எம்.கனகராணி, உ பிரிவு உதவியாளர், திருமதி டி.சாந்தி, இ பிரிவு இளநிலை உதவியாளர், திரு தினகரன், இரவுக் காவலர் ஆகியோர் இருந்தனர். அவர்களிடம் பணம் எதுவுமில்லை. மேலும், தண்டையார்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தங்களுடைய இருப்பு கணக்கை பதிவு செய்யும் பணம் கையிருப்பு பதிவேட்டினை அலுவலகத்தில் பராமரிக்கவில்லை. மேலும், அலுவலக பிரிவுகள் அ, இ, உ இயங்கி வந்த அறையில் இருந்த தனி நபர்கள் மற்றும் அவர்கள் கையிருப்பிலிருந்த பண விவரம் விவரம் பின்வருமாறு:-

| வ. எண். | பெயர் மற்றும் விலாசம் | கையிருப்பிலிருந்த பணம் | பணத்தாள்கள் விவரம் ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.ஜே.மைக்கேல், வ/36, த/பெ சார்லஸ்,எண் 38/44, மல்லிகாபுரம், காலாடிப்பேட்டை, சென்னை-19 | ரூ.4100.00 | 500 x 4 = 2000<br>100x 19 = 1900<br>50 x 4 = 200 |
| 2. | திரு.ஆர்.சசிக்குமார், வ/34, த/பெ ராஜபாண்டியன், எண் 747, டி.எச்.ரோடு, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை-81 | ரூ.4,700.00 | 500 x 8 = 4000<br>100x 7 = 700 |
| 3. | திரு.வி.பிரகாஷ் வ/30, த/பெ வாசு, எண் 20/9ஏ, மண்ணப்பர் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21. | ரூ.7050.00 | 2000 x 3 = 6000<br>500x 2 = 1000<br>50 x 1 = 50 |
| 4. | திரு.எஸ்.சதீஷ் வ/32, த/பெ சுப்ரமணியம், எண். 59, வேதகிரி தெரு, சின்னசேக்காடு, சென்னை-68 | ரூ.2100.00 | 500 x 4 = 2000<br>100x 1 = 100 |
| 5. | திரு.எஸ்.சுப்பிரமணி வ/45, த/பெ சத்யநாராயணன், எண். 21, எம்.சி.ரோடு, வண்ணாரப்பேட்டை, சென்னை-21. | ரூ.2400.00 | 500 x 3 = 1500<br>100x 9 = 900 |
| 6. | திரு.ஜே.ஜெபமாலைதாஸ் வ/40 த/பெ ஜோசப், எண். 317, கே.பிளாக், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, சிமெண்ட் ரோடு, சென்னை-21 | ரூ.7000.00 | 2000 x 1 = 2000<br>500x 7 = 3500<br>100 x 15 = 1500 |
| 7. | திரு.வி.தினேஷ், வ/42, த/பெ வரதன், எண்.3, வெங்கடாசல நாயக்கர் 3வது சந்து, திருவல்லிக்கேணி, சென்னை-5 | ரூ.370.00 | திரும்ப ஒப்படைக்கப் பட்டது. |

மேற்கண்டவர்களில் திரு.வி.தினேஷ், வ/42, த/பெ வரதன், எண்.3, வெங்கடாசல நாயக்கர் 3வது சந்து, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்பவர் வைத்திருந்த பணம் ரூ.370/-க்கு தகுந்த விளக்கமளித்ததால் அந்த பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. வரிசை எண் 1 முதல் 6 வரை உள்ளவர்கள் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்டபோது அவர்கள் தகுந்த விளக்கம் அளிக்காததால் மேற்கண்ட பணம் மொத்தம் ரூ.27,350/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலக பிரிவு அறைக்கு வெளியில் உள்ள வராண்டாவில் அமர்ந்திருந்த நபரை அழைத்தபோது அவருடைய மடியிலிருந்து பணத்தாள்கள் கீழே சிதறின. அந்த ரூபாய் நோட்டுக்களை சேகரித்து எண்ணிப் பார்த்தபோது அதில் ரூ.12,300/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு:- 2000 x 1 = 2,000/-, 500 x 16 = 8,000/-, 100 x 22 = 2,200/-, 50 x 2 = 100. அவருடைய பெயர் விலாசம் விசாரிக்க திரு எம்.செந்தில்குமார் வ/43.

எண்.19/28, தனம்மாள் நகர், கொளத்தூர், சென்னை-99 என்று தெரிவித்தார். அவரிடம் மேற்கண்ட பணம் குறித்து கேட்டபோது தகுந்த விளக்கம் அளிக்கவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.12,300/-ஐ உரிய மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், அவரை சோதனையிட்டபோது அவருடைய இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில் படிவம் 38-ன் ரசீதுகள் 3 இருந்தன. அவைகளின் வரிசை எண்கள் 8341604, 8341686, 8341687 ஆகும். இந்த 3 ரசீதுகளில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 திரு.ஜே.செந்தில்குமார் கையொப்பமிட்டுள்ளார். மேலும் திரு எம்.செந்தில்குமாரிடம் தமிழ்நாடு மோட்டார் வாகன துறை ரசீதுகள் இருந்தன. அவைகளின் வரிசை எண்கள் 1008705 முதல் 1008723 வரை உள்ள மேற்கண்ட ரசீதுகள் 19, ஆக மொத்தம் 22 ரசீதுகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், வராண்டாவில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க, அவர் திரு என்.வசந்த் வ/24, த/பெ மைக்கேல், எண்.31, அஜீஸ் நகர், 2வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-81 என்று தெரிந்தது. அவரை சோதனையிட்டபோது அவருடைய மணிபர்ஸில் ரூ.8,000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு:- 500 x 16 = 8,000. மேலும், அவருடைய கையில் TN 03 R 7140 என்ற டாடாபோல்ட் என்ற நான்கு சக்கர வாகனம், உரிமையாளர் திரு.கே.நரேந்திரன் என்பவருடைய அசல் ஆர்.சி.புத்தகம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் புதிய வண்ணாரப்பேட்டையிலுள்ள சுஜாதா ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் உதவியாளராக பணிபுரிவதாகவும், அவருடைய உத்தரவின்பேரில் மேற்கண்ட ஆர்.சி.புத்தகத்தை தண்டையார்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொண்டதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் நடத்திய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டத்தில் தங்களுடைய ஓட்டுநர் பயிற்சி பள்ளி சார்பாக கலந்து கொள்வதற்காக காத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் குறித்து விளக்கம் கேட்க, அவரால் தகுந்த விளக்கமளிக்க இயலவில்லை. அதனால் மேற்கண்ட பணம் ரூ.8,000/- உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள கைப்பற்றப்பட்டது. அசல் ஆர்.சி.புத்தகம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும், வராண்டாவில் அமர்ந்திருந்த மற்றொரு நபரை விசாரிக்க, அவர் திரு தேவானந்தம், வ/48, த/பெ சுவாமிநாதன், எண்.4/7, இந்திரா நகர், வில்லிவாக்கம், சென்னை-49 என்று தெரிந்தது. அவர் தண்டையார்பேட்டையிலுள்ள பாலாஜி ஆட்டோமோட்டிவ் நிறுவனத்தில் முகவராக பணிபுரிவதாகவும், விற்பனை சான்றிதழில் கையொப்பம் பெற தண்டையார்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனையிட அவரிடம் ரூ.9,500/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு. 2000 x 3 = 6,000/-, 500 x 6 = 3,000/-, 100 x 5 = 500. மேற்படி பணம் குறித்து விவரம் கேட்க, அவரால் தகுந்த விளக்கமளிக்க இயலவில்லை. அதனால் மேற்கண்ட பணம் ரூ.9,500/- உரிய மேல் நடவடிக்கை

மேற்கொள்ள கைப்பற்றப்பட்டது. மேலும், வராண்டாவில் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரிக்க, அவர் திரு பாலாஜி, வ/33, த/பெ வரதன், எண்.3, வெங்கடாசல நாயக்கர் 3வது சந்து, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்று தெரிந்தது. அவருடைய டாடா ஏஸ் TN 03 W 3453 வாகனத்திற்கு அனுமதி சீட்டு இல்லா வாகன பதிவுச் சான்று பெறுவதற்காக தண்டையார்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார்.அவரை சோதனையிட அவரிடம் ரூ.7,600/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு. 500 x 2 = 1,000, 100 x 66 = 6,600. மேற்படி பணம் குறித்து விவரம் கேட்க, அவரால் தகுந்த விளக்கமளிக்க இயலவில்லை. அதனால் மேற்கண்ட பணம் ரூ.7,600/- உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள கைப்பற்றப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகம், சென்னை (வடகிழக்கு), சென்னை அலுவலகத்தில் மொத்தமாக கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | பணம் கைப்பற்றப்பட்ட இடம் | கைப்பற்றிய பணம் |
|---|---|---|
| 1 | எல்காட் அறையிலிருந்து | ரூ.15,490/- |
| 2 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்து | ரூ.53,800/- |
| 3 | அலுவலக அ, இ மற்றும் உ பிரிவு அறையிலிருந்த தனி நபர்களிடமிருந்து | ரூ.27,350/- |
| 4 | வராண்டாவிலிருந்த திரு செந்தில்குமார் என்பவரிடமிருந்து | ரூ.12,300/- |
| 5 | வராண்டாவிலிருந்த திரு வசந்த் என்பவரிடமிருந்து | ரூ.8,000/- |
| 6 | வராண்டாவிலிருந்த திரு தேவானந்தம் என்பவரிடமிருந்து | ரூ.9,500/- |
| 7 | வராண்டாவிலிருந்த திரு பாலாஜி என்பவரிடமிருந்து | ரூ.7,600/- |
| | மொத்தம் | ரூ.1,34,040/- |

மேற்படி அலுவகைத்தில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,34,040/- அலுவலக நடைமுறையில் வராத பணமாகவும், தகுந்த காரணமின்றி வட்டார போக்குவரத்து அலுவலகம், சென்னை (வடகிழக்கு), சென்னை அலுவலகத்தில் இருந்தது குறித்தும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு கே.எம். பிரபாகரன், மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1, திரு ஜே.செந்தில்குமார் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-II, திரு ஆர்.சரவணன் ஆகியோரிடம் விளக்கம் கோரியபோது அவர்களால் சரியான விளக்கம் கொடுக்க இயலவில்லை. ஆகவே மேற்படி பணம்

இவ்விசாரணையின் சொத்தாக மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகம், சென்னை (வடகிழக்கு), சென்னை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீா் ஆய்வின் போது அலுவலகத்தின் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாத வருகைப் பதிவேடு (பக்கம் 1 முதல் 10 வரை) நகலெடுத்து அதில் வட்டார போக்குவரத்து அலுவலா் திரு கே.எம். பிரபாகரன் அவா்களின் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகம், சென்னை (வடகிழக்கு), சென்னை பணப்பதிவேடு நாள் 11.04.2017 முதல் ......முடிய தொகுதி எண்.IIல் பக்கம் 201ல் பண இருப்பு விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கையிருப்பில் ரூ.7431/- உள்ளது. ரூ.4,62,799/- (ரூ.3,95,099/- பணமாகவும் மற்றும் ரூ.67,700/- வரைவோலையாகவும்) ரிசா்வ் வங்கியில் இன்றைய தினம் (04.01.2018) செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி பதிவேட்டில் பக்கங்கள் 200 மற்றும் 201 நகலெடுத்து (பக்கம் 1 முதல் 6 வரை) அதில் வட்டார போக்குவரத்து அலுவலகம், சென்னை (வடகிழக்கு), சென்னை திரு கே.எம். பிரபாகரன் அவா்களின் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இரு துறை கூட்டு திடீா் தணிக்கை இன்று (04.01.2018) இரவு 23.45 மணியளவில் முடிக்கப்பட்டது.

| | |
|---|---|
| Sd/-xxx<br>வட்டாட்சியா்,<br>மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலா்,<br>மாவட்ட ஆய்வுக்குழும அலுவலகம்,<br>சென்னை - 600 001. | Sd/xxx<br>காவல் துணை கண்காணிப்பாளா்,<br>ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை<br>சென்னை நகரப் பிரிவு-3,<br>ஆலந்தூா், சென்னை-16. |
| Sd/-xxx<br>காவல் ஆய்வாளா்,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,<br>சென்னை நகரப் பிரிவு-3,<br>ஆலந்தூா், சென்னை - 600 016. | Sd/-xxx<br>திரு.கே.எம்.பிரபாகரன்,<br>வட்டார போக்குவரத்து அலுவலா்,<br>வட்டார போக்குவரத்து வட கிழக்கு அலுவலகம்,<br>சென்னை- 600 081. |
| Sd/- xxx<br>திரு.ஜே.செந்தில்குமாா்,<br>இயக்க ஊா்தி ஆய்வாளா் நிலை-1,<br>வட்டார போக்குவரத்து வட கிழக்கு அலுவலகம்,<br>சென்னை- 600 081 | Sd/- xxx<br>திரு.ஆா்.சரவணன்,<br>இயக்க ஊா்தி ஆய்வாளா் நிலை-II,<br>வட்டார போக்குவரத்து வட கிழக்கு அலுவலகம்,<br>சென்னை- 600 081. |

Sir, Registered a case in Chennai V&AC, Chennai City-III Cr.No.1/AC/2018/CC-III u/s 102 CrPC, 13(2) r/w 13(1) (d) of Prevention of Corruption Act, 1988 on 05.01.18 at 19.00 hrs.

The original FIR along with complaint and proceedings are submitted to the Hon'ble Special Judge for cases under the Prevention of Corruption Act, 1988 and other copies were submitted officers concerned.

5.1.18

M.Visvakhumar,
Inspector of Police,
Chennai City-III Detachment,
V&AC, Alandur, Chennai-16.